பக்கங்கள் 15+ 04

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மாசி 19 திங்கட்கிழமை 03.03.2025 அதிர்வு 212

## ரயிலில் மோதி மாணவன் சாவு

ரயிலில் மோதி பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரத்திலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி குறித்த மாணவன் உயிரிழந்துள்ளார் என்று அம்பலாங்கொடை 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு வெளியானது

# 17 முதல் 20 வரையில் வேட்புமனுத் தாக்கல்

## இன்று தொடக்கம் 19 ஆம் திகதி வரையும் வைப்புத் தொகையைச் செலுத்த முடியும்

நாடு முழுவதும் 336 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பைத் தேர்தல் ஆணையம் இன்று திங்கட்கிழமை வெளியிட்டது.

2025 உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் 2025 மார்ச் 17 முதல் 20ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 02

### பூநகரி, மன்னார் பிரதேச சபைகள் உட்பட

## 4 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் அறிவிக்கப்படவில்லை

நாட்டிலுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில் 336 சபைகளுக்கே இப்போது தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

காலி மாவட்டம் எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் அண்மை 02

### யாழ். சிறையில் இந்திய மீனவர்களை நேரில் பார்வையிட்ட சிறீதரன் எம்.பி.




02




# யாழ். சிறையில் இந்திய மீனவர்களை நேரில் பார்வையிட்ட சிறீதரன் எம்.பி.

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள இந்திய மீனவர்களை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இன்று நேரில் சென்று பார்வையிட்டார்.

இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்கக் கோரி இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதேநேரம் இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்துமாறு உள்ளூர் மீனவர்களும் கோரிக்கை விடுத்து வருவதனால் அது தொடர்பில் ஆராயும் நோக்கில் இந்திய மீனவர்களை சிறையில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினார் சிறீதரன் எம்.பி.

“எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதனால் உள்ளூர் வளம் அழிக்கப்படுவதோடு உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரமும் அழிகின்றது. அதனால் எல்லை தாண்டும் இந்திய மீனவர்களான உங்களைச் சிறைப் பிடித்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் போது இந்திய மீனவர்களான உங்கள் குடும்பத்தின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது.” – என்று இதன்போது சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

சிறையில் குறைகள் இல்லாத போதும் 40 நாட்களாகச் சிறையில் உள்ளபோதும் ஒரேயொரு தடவை மட்டும் குடும்பத்தினருடன் தொலைபேசியில் உரையாடுவதற்கு இந்திய மீனவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. எனவே, தொலைபேசியில் உரையாடுவதற்கான அனுமதியை வழங்குவதற்கு உதவுமாறும், சிறைச்சாலையில் இருந்தாலும் வெளியுலக நடப்புகளை அறிந்துகொள்ள செய்திகளைப் பார்வையிட சிறைக் கூடத்தில் ஒரு தொலைக்காட்சி வசதியை ஏற்படுத்தித் தருமாறும் இந்திய மீனவர்கள் தரப்பில் கோரப்பட்டது.

# மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு!

நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட முதலாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தென், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், மாத்தளை, நுவரெலியா மற்றும் பொலனறுவை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் வளிமண்டளவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், வடக்கு மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தில் சில இடங்களில் மழை பெய்யக்கூடும் என்றும், ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## 17 முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி, நாடு முழுவதும் உள்ள 336 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான மேயர்கள், துணை மேயர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது தொடர்பான அறிவிப்புகள் தற்போது அந்தந்த உள்ளூராட்சி அமைப்புகளில் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றில் 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 272 பிரதேச சபைகள் அடங்குவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், கல்முனை மாநகர சபை, தெஹியத்தகண்டிய பிரதேச சபை (அம்பாறை மாவட்டம்), மன்னார் பிரதேச சபை (மன்னார் மாவட்டம்), பூநகரி பிரதேச சபை (கிளிநொச்சி மாவட்டம்), எல்பிட்டிய பிரதேச சபை (காலி மாவட்டம்) ஆகியவை இந்தத் தேர்தலில் இருந்து விலக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், மார்ச் 13, போயா நாள் மற்றும் மார்ச் 8, 9, 15 மற்றும் 16 ஆகிய வார இறுதி நாள்களைத் தவிர்த்து, இன்று மார்ச் 3 முதல் மார்ச் 19, 2025 நண்பகல் 12.00 மணி வரை வேட்பாளரின் பாதுகாப்பு வைப்புத்தொகை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.

## 4 உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடந்து முடிந்திருப்பதால் அச்சபைக்கான தேர்தல் இப்போது நடைபெறாது.

தற்போது தேர்தல்கள் நடைபெற வேண்டிய உள்ளூராட்சி சபைகளின் பட்டியல் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில் மன்னார் பிரதேச சபை (மன்னார் மாவட்டம்), தெஹியத்தகண்டிய பிரதேச சபை (அம்பாறை மாவட்டம்), பூநகரி பிரதேச சபை (கிளிநொச்சி மாவட்டம்) மற்றும் கல்முனை மாநகர சபை ஆகிய வற்றுக்கான தேர்தல்களே இப்போது அறிவிக்கப்படவில்லை. இவை தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருக்கின்ற காரணத்தால் தேர்தல் அறிவிப்புகள் இந்தச் சபைகளுக்கு விடப்படவில்லை.

மன்னார் பிரதேச சபை, தெஹியத்தகண்டிய கண்டிய பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை ஆகியவற்றுக்காக 2023 இல் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாகவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கின்றன. இப்போது அந்த வேட்புமனுக்கள் முழுமையாக இரத்துச் செய்யப்பட்டு விட்டமையால் அந்த வழக்குகளை விலக்கிக் கொள்ளும்படிகோரிநகர்த்தல்பத்திரங்கள் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் தேர்தல் திணைக்களத்தால் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன. நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் அவற்றுக்கும் வேட்புமனுக்கள் கோரி, அவற்றுக்கும் சேர்த்து ஒரே சமயத்தில் நாடு முழுவதும் இந்தத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சியை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு இருப்பதாகத் தெரிகின்றது.

கல்முனை மாநகர சபையைப் பொறுத்தவரை அந்த மாநகர சபையின் எல்லை நிர்ணயம் மீளச் செய்யப்பட வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் இருப்பதால் அது முடிந்த பின்னரே அங்கு தேர்தல் முன்னெடுக்கப்படும் எனத் தெரிகின்றது.

இவை தவிர்த்த 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 272 பிரதேச சபைகளுக்கான தேர்தல்களே இப்போது அறிவிக்கப்பட்டுள்ளன.

## ரயிலில்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாங்கொடை கரித்தகந்த வாயிலுக்கும் கந்தேகொட ரயில் நிலையத்துக்கும் இடையில் 52.5 தூணுக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் எல்பிட்டிய, எல்ல வீதியில் வசிக்கும் 16 வயதுடைய பாடசாலை மாணவன் ஆவார்.

மேற்படி மாணவன் தனது கையடக்கத் தொலைபேசியில் பேசியவாறு ரயில் தண்டவாளத்தில் தனியாகப் பயணித்தார் என்றும், ரயில் ஒலி எழுப்பியும் அவருக்குச் சத்தம் கேட்கவில்லை என்றும், பின்னால் வந்த ரயில் மோதியதால் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மாணவன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு இம்முறை தோற்றவிருந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வந்தது தேர்தல் அறிவிப்பு

எதிர்பார்க்கப்பட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் திகதி அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

வரும் மார்ச் 17 முதல் இருபதாம் திகதி நண்பகல் 12 மணி வரை அந்தந்த மாவட்டங்களுக்குரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மாவட்ட செயலகங்களில் வைத்து உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்வதற்கு மூன்றரை நாள்கள் வழங்கப்பட வேண்டும். அதற்கு 14 நாள் முன்னறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும். இதுதான் சட்டத்தில் உள்ள ஏற்பாடு.

இன்று மார்ச் 3 ஆம் திகதி இந்த உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியாகி இருக்கின்றது. அதன்படி 14 நாள்கள் வழங்கப்பட்டு, மார்ச் 17 முதல் 20 ஆம் திகதி நண்பகல் வரை மூன்றரை நாள்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யக் கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தல் சட்ட ஏற்பாடுகளின் படி, வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர்தான் தேர்தல் திகதி அறிவிக்கப்பட வேண்டும். வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட தினத்தில் இருந்து ஐந்து முதல் ஏழு வார காலம் பிரசாரத்துக்கு இடமளிக்கும் வகையில் தேர்தல் திகதி நிர்ணயிக்கப்பட வேண்டும். உள்ளூராட்சித் தேர்தல்களைப் பொறுத்த வரை வழமையாக குறைந்தது ஆறு வாரங்களாவது தேர்தல் பிரசாரத்திற்கு வழங்குவது இடம்பெற்று வருகின்றது.

அதன்படி இம்முறை 20 ஆம் திகதி வேட்பு மனுத் தாக்கல் முடிவடைந்த பின்னர் ஆறு வார காலம் தேர்தல் பிரசாரத்துக்கு இடமளிக்கும் வகையில் மே மாதம் முதலாம் வாரத்தில் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு அல்லது எட்டாம் திகதிகளில் ஒரு நாளில் இந்தத் தேர்தல் நடைபெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. இது முடிந்த பின்னர் தேர்தலை அறிவிக்கும்படி எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையத்தை வலியுறுத்திக் கோரியிருந்தன. ஆனால் தேர்தலை வெசாக் கொண்டாட்டங்களுக்கு முன்னர் நடத்தி முடிக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்த தேர்தல் ஆணையம் எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை புறக்கணித்து தேர்தலை அறிவித்துவிட்டது.

தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சிச் சபைகள் குறித்து மட்டும் தான் அவை கவனம் செலுத்த வேண்டி இருக்கும். ஆனால் தென்னிலங்கைக் கட்சிகள் முழு நாட்டிலும் தேர்தல் நடைபெறும் 336 உள்ளூராட்சி சபைகளில் குறைந்தது 325 சபைகள் குறித்தாவது கவனம் செலுத்த வேண்டியுள்ளன. ஒவ்வொரு உள்ளூராட்சி சபை தொடர்பிலும் - அவற்றின் ஒவ்வொரு வட்டாரங்கள் தொடர்பிலும் - பட்டியல் வேட்பாளர்கள் தொடர்பிலும் - அவை கவனம் செலுத்த வேண்டியிருக்கும். அத னால் தேர்தல் அறிவிக்கப்பட்ட இன்றைய தினத்திலிருந்து அடுத்த 20 ஆம் திகதி வேட்பு மனுக்கள் தாக்கல் முடிவடையும் வரை ஒவ்வொரு உள்ளூராட்சி சபை தொடர்பிலும் அவை கவனம் செலுத்த வேண்டியிருக்கும். குறைந்தது ஒரு நாளைக்கு 20 உள்ளூராட்சி சபைகள் குறித்து கட்சித் தலைமைகள் தீர்மானம் எடுத்தால்தான் அடுத்த 17 நாள்களுக்குள் 336 உள்ளூராட்சி சபைகள் தொடர்பிலும் அவை முடிவெடுக்க முடியும். அதனால் தென்னிலங்கைக் கட்சியினரும், அவர்க ளின் தலைவர்களும் வரவு - செலவுத்திட்ட விவாத விவகாரத்தை புறமொதுக்கிவிட்டு தேர்தல் தயாரிப்பு ஏற்பாடுகளில் முழுமையாக இறங்க வேண்டிய இக்கட்டில் சிக்கி இருக்கின்றனர்.

ஒருவகையில் தேர்தல் ஆணையத்தின் இந்த அதிரடி அறிவிப்பு எதிரணிக்கு இழைக்கப்பட்ட இக்கட்டாகவே இருக்கும். அரசுத் தரப்பைப் பொறுத்தவரை கட்டமைப்பு ரீதியாக - நிர்வாக ரீதியாக - செயற்பாட்டு ரீதியாக - அவை ஓர் ஒழுங்கமைப்பில் இருப்பதால் இந்தத் தேர்தல் தயாரிப்பில் ஈடுபடுவதில் அத் தரப்புக்கு நெருக்கடி குறைவாகவே இருக்கும்.

எதிரணிக் கட்சிகளும், தமிழ் கட்சிகளும் தங்கள் புஜபல பராக்கிரமத்தை காட்டுவதற்கு இந்த குட்டிப் பொதுத் தேர்தலை முழுமுனைப்போடு எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன என்பது தான் கள நிலைமையாகும்.



# குறிஞ்சிப்பிட்டியில் விபத்து; ஒருவர் காயம்!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி, பாலாவி பிரதான வீதியில் குறிஞ்சிப்பிட்டி சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (02) பகல் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் காயங்களுடன் கற்பிட்டி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

லொறியும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அதனைச் செலுத்தியவர் சிறு காயங்களுடன் கற்பிட்டி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளைக் கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# கனினி அபிருத்தி நிலையம் திறப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

பெருந்தோட்ட பகுதியில் மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்தும் வகையில் தெற்கு மடக்கும்புர பகுதியில் கணினி அபிவிருத்தி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இ.தொ. காவின் தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரனின் வேண்டுகோளுக்கிணங்க வெள்ளவத்தை நித்தியகல்யாணி நகையக உரிமையாளர் ஏ.பி. ஜெயராஜாவின் நிதி அனுசரணையில் திறந்து வைக்கப்பட்டது.

வட்டக்கொடை பகுதியிலுள்ள மாணவர்களின் கணினி அடைவு மட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்தக் கணினி



அபிவிருத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ராமேஸ்வரன், வெள்ளவத்தை நித்திய கல்யாணி நகையக உரிமையாளர் ஏ.பி.ஜெயராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.







# மதியூகி மத்தியூ அடிகளாரின் நினைவுப் பேருரை கல்முனையில்!

**(வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "தொடர் நினைவு பேருரை- 2025" நிகழ்வில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் முன்னாள் அதிபர் கல்விமான் மதியூகி அருட் சகோதரர் எஸ்.ஏ.ஐ மத்தியூ நினைவுப் பேருரை நேற்று ஞாயிற்றுக்கிழமை கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பற்றிமா தேசிய கல்லூரியின் அதி பர் வண. அருட்சகோதரர் எஸ்.ஈ. ஹெஜினோல்ட் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ் தலைமை வகிக்க, நினைவு நாயகரை பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் அறிமுகம் செய்துவைத்தார்.

இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையை "சர்வதேச தரத்துக்கு ஈடு கொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா?" எனும் தலைப்பில் அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரி முன்னாள் பீடாதிபதி சட்டத்தரணி கி. புண்ணியமூர்த்தி நிகழ்த்தினார்.

பேருரையாளர் அறிமுகத்தை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ச. நவநீதனும் நன்றி உரையை கலாசார உத்தியோகத்தர் த. பிரபாகரனும் வழங்கினர்.

அருட்சகோதரர் மத்தியூ அடிகளாரின் அபிமானிகள் இலக்கியவாதிகள் கலந்து கொண்டனர்.



SCAN ME

# சுகாதார சேவை முறைப்பாடுகளை தெரிவிப்பதற்குக் 'கியூ.ஆர்' குறியீடு!

**(பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்)**

பொதுமக்கள் தங்களது சுகாதார சேவைகள் குறித்த முறைப்பாடுகளை தெரிவிப்பதற்காகக் 'கியூ.ஆர்' குறியீட்டு முறைமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கு அமைவாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பொது இடங்கள் மற்றும் பொது மக்கள் ஒன்று கூடும் இடங்களில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கான இந்த 'கியூ.ஆர்' குறியீட்டு ஸ்டிக்கர் அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியும் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் சம்மேளனத் தலைவருமான டாக்டர் சனூஸ் காரியப்பர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவரும், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்துக்கு உட்பட்ட உணவு கையாளும் நிறுவன தலைவர்களும் கலந்து கொண்டனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# மன்னார் - சிலாவத்துறை பொலிஸ் பிரிவில் கேரளா கஞ்சா பொதியுடன் ஒருவர் கைது!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

கடற்படை புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம், மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மன்னார் - சிலாவத்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யாசீம் சிற்றி பகுதியில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை (2) மாலை ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளை மீட்டுள்ளனர். அத்துடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா 31 கிலோ 62 கிராம் எடை கொண்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல். வை.ஏ.எஸ். சந்திரபாலவின் பணிப்பில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் (2) போதி பக்ஸ என்பவரின் வழிகாட்டலில் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு தற்காலிக பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மதுரங்க, பொலிஸ் சார்ஸன் 74927 குணசிங்க தலைமையிலான அணியினரே இந்தக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சவரிபுரம்,சிலாவத்துறை பகுதியை சேர்ந்த 47 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# போலி அனுமதிப் பத்திரத்துடன் மணல் ஏற்றிய சாரதிகள் கைது!

(த.சுபேசன்)

போலி அனுமதிப் பத்திரத்துடன் மணல் ஏற்றிச் சென்ற இரண்டு டிப்பர் வாகனங்களை வெள்ளிக்கிழமை ஏ-9 வீதி சாவகச்சேரியில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் போலியான கடிதத் தலைப்பு, பதவி முத்திரை ஆகியவற்றைப் பயன்படுத்தியே இந்த மணற் கடத்தல் இடம்பெற்றுள்ளது.

இந்தத் திணைக்களத்தின் ஊடாக அனுமதி போலியானது என்பதை உறுதிப்படுத்திய பொலிஸார் இரண்டு டிப்பர் வாகனங்களையும் தடுத்து வைத்துள்ளனர். சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனைக்குத் தடை!

## சுகாதார வைத்திய அதிகாரி நடவடிக்கை

(அபு அலா)

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜீவராணி சிவசுப்ரமணியம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது புனித ரமழான் காலம் ஆரம்பித்துள்ளது. அநேகமாக பள்ளிவாசல்களில் நோன்பு திறப்பதற்காக கஞ்சி காய்ச்சும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதில் கஞ்சி விநியோகத்தின்போது, பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் பொலித்தீன் பைகளிலும், பிளாஸ்ரிக் பாத்திரங்களிலும் பொது மக்களுக்கு கஞ்சி விநியோகம் நடைபெறுகிறது. இது ஒரு தவறான வழிமுறையாகும். இதனால் 40 இற்கும் அதிகமான புற்று நோய்கள் உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எனவே இவ்வாறான நேரங்களில் பொதுமக்களும், பள்ளிவாசல் நிர்வாகத்தினரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும்.

குறிப்பாக சில்வர் அல்லது அலுமினியம் போன்ற பாத்திரங்களின் மூலம் கஞ்சி விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பது பள்ளிவாசல் நிர்வாகத்தின் கட்டாயமாகும். இது சம்பந்தமாக ஒவ்வொரு பள்ளிவாசலுக்கும்




எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நோன்பு காலங்களில் சூடான உணவுப் பொருட்களை விற்பனை செய்பவர்கள் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். மேலும் இவ்விடயம் பற்றி சுகாதார பரிசோதகர்கள் மூலம் அடிக்கடி களப்பரிசோதனைகள் நடாத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே இவ்வாறான விடயங்களை அனைத்து தரப்பினரும் கடைப்பிடிக்க வேண்டும்.- என்றார்.





# இராமகிருஷ்ண பரமஹம்சரின் 190 ஆவது ஜெயந்தி விழா!

( வி.ரி. சகாதேவராஜா)

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 190 ஆவது ஜெயந்தி விழா மட்டக்களப்பு கிரான்குளம் விவேகானந்த பூங்காவில் நடைபெற்றது.

உலகெலாம் ஜீவசேவை ஆற்றிவரும் இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த சுவாமி விவேகானந்தரின் பெயரால் இலங்கையில் முதன் முதலாக மட்டக்களப்பு கிரான் குளத்தில் அமைக்கப்பட்ட விவேகானந்த பூங்காவில் பூங்கா ஏற்பாட்டாளர் கந்தப்பன் பிரதீஸ்வரன் முன்னிலையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பிரதம அதிதியாகக் கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராஜா கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வை முன்னெடுத்த விவேகானந்த பூங்கா ஸ்தாபகர் பிரபல சமூக செயற்பாட்டாளர் கந்தப்பன் சற்குணேஸ்வரனையும் அங்கு சமூகமளித்திருந்த அவரது சகோதரர் கந்தப்பன் பிரதீஸ்வரன் உள்ளிட்ட குழாத்தினரையும் சுவாமிகள் பாராட்டினர்.

சமூக நலன்புரி ஒன்றியம், விவே கானந்த தொழில்நுட்பக் கல்லூரி, முல்லைத்தீவு அன்னை சாரதா இல்லம், மட்டக்களப்பு திலகவதியார் மகளிர் இல்லம் போன்ற பல சமூக நோக்குடைய அமைப்புக்களை உருவாக்கி ஜீவ சேவையாற்றி வரும் க.சற்குணேஸ்வரன் அண்மையில் கிரான் குளம் விவேகானந்த பூங்காவை பிரமாண்டமான முறையில் ஸ்தாபித்தமை குறிப்பிடத்தக்கது.





# சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலில் புனித நோன்பை முன்னிட்டு சிரமதானம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் புனித நோன்பு ஆரம்பமாவதை முன்னிட்டு, புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட இடைக்கால நிர்வாக சபையினர் பள்ளிவாசலை சுத்தப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டனர்.

இதன்போது போது இடைக்கால நிர்வாக சபையின் தலைவர் டாக்டர் எம்.எச். சனூஸ் காரியப்பர், பொதுச் செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.எம்.முனாஸ், பொருளாளர் ஏ.எல். எம்.முஸ்தபா உட்பட புதிய இடைக்கால நிர்வாக சபையின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட மரைக்காயர்கள் கலந்து கொண்டு பள்ளிவாசலைச் சுத்தப்படுத்தினர்.

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பினர் தானாக முன்வந்து இந்தச் சிரமதானப் பணியில் இணைந்து கொண்டனர்.







# மருதம் கலைக்கூடல் மன்றத்தின் 11 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள்

(எம்.எஸ்.எம்.ஸாகிர், நூருல் ஹுதா உமர்)

மருதம் கலைக்கூடல் மன்றத்தின் 11 ஆவது ஆண்டு விழா சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் சாய்ந்தமருது பொலிவேரியின் கிராமத்தில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையத்தில் மர்ஹூம் கலைச்சுடர் சக்காப் மௌலானா ஞாபகார்த்த அரங்காக இடம்பெற்றது.

பாரம்பரியக் கலையான கலாபூஷணம் அபூபக்கர் இஸ்ஸதீன் தலைமையிலான மருதூர் கலைமன்றம் பொல்லடிக் குழுவினரால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டு அதிதிகள் வரவேற்கப்பட்டனர்.

மன்றத்தின் தலைவர் கலைஞர் அஸ்வான் சக்காப் மௌலானாவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குச் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹீர், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றிம்ஸான், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களான மௌலவி ஏ. தௌபீக், ஏ.எச்.சபீகா, ஓய்வுநிலை கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஸ்ரப், அமானா நற்பணிமன்றத்தின் தலைவர் ஏ.எல்.ஏ. பரீட், மருதமுனை புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலய அதிபர் ஏ.எல். அன்சார், சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய அதிபர் எம்.சி. றிப்கா அன்ஸார், பிரதேச பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், மன்ற நிர்வாகிகள்,



உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலை, இலக்கிய கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. பல்துறைக் கலைஞரும் மன்றத்தின் உபதலைவருமான என்.எம். அலிகான், கலையுலகில் ஆற்றிவரும் அயராத சேவைக்காக, “மருதூர் அலிகான்” எனும் சிறப்புப் பட்டத்துடன் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் இந்த மன்றத்தை உருவாக்கி, இலைமறை காயாக உள்ள பலதரப்பட்ட கலைஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து, பிரதேசத்தில் கலையை அழிய விடாது, இன்றும் ஆற்றிவரும் பணிக்காக, மன்றத்தின் தலைவர் கலைஞர் அஸ்வான் சக்காப் மௌலானா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

# திருப்பாடுகளின் நாடக பிரதி வழங்கும் நிகழ்வு

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுக ளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை மறுதினம் புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு இல.17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத் தின் ‘கலைஞான சுரபி’ தியான இல் லத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ .ஜெபரட்ணம் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவார். ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழ மையாக திருப்பாடுகளின் நாடகத் தில் பங்கேற்கும் அனைத்துக் கலைஞர் களையும் புதிதாக இணைந்துக் கொள்ள விரும்புபவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் ஏப்பிரல் மாதம் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையிலான நான்கு நாள்களுக்கு ‘வெள்ளியில் ஞாயிறு’ என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

‘வெள்ளியில் ஞாயிறு’ திருப்பாடுக ளின் நாடகம் முதன் முதலாக 2010 ஆம் ஆண்டிலும், அதனைத் தொடர்ந்து 2018 ஆண்டிலும் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. தற் போது ஏழு ஆண்டுகளின் பின்னர் மீண்டும் மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் திருட்டுச் சந்தேக நபர் கைது!

## பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் மீட்பு

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் உள்ள வீடு ஒன்றை உடைத்து 13 லட்சம் ரூபா பணம் திருடப்பட்டதாக வீட்டு உரிமையாளர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாடுக்கு அமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினர் குறித்த பகுதியில் காணப்படும் வீடு மற்றும் வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கமராவை சோதனை செய்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன்போது நேற்று முன்தினம் (01) சனிக்கிழமை மலையடிக்கிராமம் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய



சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து திருடப்பட்ட பணத்தின் ஒரு தொகையும், திருட்டுச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், வீடு உடைப்பதற்கு பயன்படுத்த உபகரணங்கள் என்பனவும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கைது நடவடிக்கையானது, கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர் எ.ம். நிரஞ்சன் உள்ளிட்ட அதிகாரிகள் மேற்கொண்டனர். சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எழுவைதீவு - அனலை தீவு கடற்பரப்பில் 197 கிலோ கஞ்சா கடற்படையால் மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் எழுவை தீவு மற்றும் அனலைதீவு இடையே உள்ள கடற்பரப்பில் 197 கிலோ கிராம் கஞ்சா இன்று (03) காலை கடற்படையால் மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதி கடற்படையினரின் விசேட ரோந்து நடவடிக்கைகளின் போது கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக எழுவைதீவு - அனலை தீவு கடற்பரப்பில் பயணித்த படகு ஒன்றைச் சோதனையிட்ட போது 190 கிலோ 400 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதன்போது காரைநகர் மற்றும் மன்னார் பேசாலை பகுதிகளைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.





இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரையும் சான்று பொருள்களுடன் ஊர்காவற்துறை பொலிஸாரின் ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# கணித, விஞ்ஞான போட்டிகளில் தலவாக்கலை பாடசாலை முதலிடம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஹட்டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியின் பழைய மாணவர்களால் ஹட்டன் பொஸ்கோ கல்லூரியில் நடத்தப்பட்ட நுவரெலியா மாவட்டத்தின் பாடசாலைகளுக்கு இடையிலான கணித, விஞ்ஞான போட்டியில் முதலாம் இடத்தை தலவாக்கலை தமிழ் மகா வித்தியால மாணவர்கள் பெற்றனர்.

இந்த மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களான சாள்ஸ், நவீன், எம்.ஜி.சர்மா, அமுதப்பிரியா, லாவண்யா ஆகியோருக்கும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பாடசாலையின் அதிபர் ரோஹினி, உப அதிபர் ஜெகதீசன், பிரதி அதிபர்கள் உட்பட ஏனைய ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.



### 150 வருடங்களுக்கு மேல் பழமையான

# பெருந்தோட்ட தொழில் முறைமையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்!

### பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனத்தின் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை

**(க.கிஷாந்தன்)**

150 வருடங்களுக்கு மேல் பழமையான பெருந்தோட்ட தொழில் முறைமையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்று பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனத்தின் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்தார்.

நானுஓயா ரதெல்ல பகுதியில் தோட்ட நிறுவனத்தால் நடத்தப்பட்ட சிறந்த தேயிலை கொழுந்து பறிக்கும் போட்டியில் பிரதம அதிதியாக கலந்துக் கொண்ட பின் ஊடகங்களுக்குப் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சம்பள உயர்வு முன்மொழிவு தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் அரசு பேச்சு நடத்தவில்லை. எதிர்காலத்தில் நடத்துமென நம்புகின்றோம்.

உற்பத்தி அடிப்படையிலான சம்பள உயர்வையே அரசு கருதுகின்றது என நினைக்கின்றேன். பெருந்தோட்டத்



தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் நாம் இல்லை. ஆனாலும் குறைந்தளவான விளைச்சல் மற்றும் விலையால் வழங்கமுடியாத சூழ்நிலை உள்ளது.

உற்பத்தித் திறன் அடிப்படையிலான சம்பளமே சிறந்த நடைமுறையாக இருக்கும். பெருந்தோட்ட தொழில்முறையில் 150 வருடங்களாக உள்ள தொழில் நடைமுறை மாற்றப்பட வேண்டும்.

காலையில் 8 மணிக்கு வேலைக்கு செல்லுதல், 12 மணிக்கு மதிய உணவுக்கு வருதல், அதன் பின்னர் மீண்டும் வேலைக்கு செல்லுதல் என்ற நிலை காணப்படுகின்றது.

எனவே, குறிப்பிட்ட அளவான தொகையை பறித்தால் அவர்களுக்கு வீடு திரும்பக் கூடிய நிலை காணப்பட வேண்டும். அது பெண் தொழிலாளர்களுக்கு குடுபத்தைக் கவனித்துக் கொள்ளவும், ஓய்வெடுக்கவும் உதவியாக இருக்கும்.

10 வருடங்களாக இந்தக் கோரிக்கையை நாம் முன்வைத்துவருகின்றோம். உற்பத்தி திறன் அடிப்படையில் அதிக சம்பளத்தை தொழிலாளர்கள் பெறுவதை நாம் எதிர்க்கவில்லை. எனவே, புதிய நடைமுறையொன்று அவசியம். உற்பத்தி திறன் அடிப்படையில் சென்றால் நாளொன்றுக்கு 4 ஆயிரம் ரூபாவரையில்கூட உழைக்கலாம்.- என்றார்.







# சுன்னாகம் ரோட்டரிக் கழகத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளம்

**(த.சுபேசன்)**

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் உத்தியோக பூர்வ இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு கழகத்தின் தலைவி தனிதா கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த இணையத்தள (https://rcchunnakamheritage.org) அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக ரோட்டரி உதவி மாவட்ட ஆளுநர் ரகுராம் கலந்து கொண்டார்.

அத்துடன் குறித்த தினத்தில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய சஞ்சிகை ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.





# திருக்கோவில் வலய முன்பள்ளிகளது ஆசிரியர்களுக்கு வேதனம் அதிகரிப்பு

( வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் கல்வி வலய பிரதேசத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு 3 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

திருக்கோவிலைச் சேர்ந்த பிரபல தொழிலதிபரும் கல்முனை ரோட்டரிக் கழகத்தின் முன்னாள் தலைவருமான பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் இதற்கான கொடுப்பனவை வழங்கியுள்ளார்.

திருக்கோவில் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு, கொடுப்பனவுக்கு மேலதிகமாக மாதாந்தம் 3000 ரூபாவை வழங்கி வைக்கும் வேலைத்திட்டம் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பிரபல சமூக செயற்பாட்டாளரும் கல்முனை ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவருமான பொறியியலாளருமான சுந்தரலிங்கம் சசிகுமார் கலந்து கொண்டார்.



திருக்கோவில் வலய முன்பள்ளி பாடசாலைகள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. விவேகானந்தராஜாவும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

இது ஆறு மாத தொடர்ச்சியான நிதி உதவித் திட்டமாகும். சுமார் 30 லட்சம் ரூபா மதிப்பீட்டில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிதி உதவித் திட்டத்தின் மூலம் 164 ஆசிரியர்கள் பயனடைகின்றமை குறிப்பிடத்தக்கது.







# மல்லாகத்தில் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சிகள்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை (02) மல்லாகத்தில் நடைபெற்றுள்ளது. மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டுவதன் மூலம் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சூழல் பாதுகாப்பில் ஈடுபடுத்தும் நோக்குடனும், அவர்களில் பன்முக ஆளுமைகளையும் விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாகவே மல்லாகம் கல்லாரை கிராமத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர் இ. மிதுக்ஷன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கனடாவில் இருந்து வருகை தந்திருந்த ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகர் ஞானம்மா திருநாவுக்கரசு அம்மையாரும், சிறப்பு விருந்தினர்களாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், ஆசிரியர் சி. நவநீதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நூற்றுக்கணக்கான மாணவர்களும், பெற்றோர்களும் பங்கேற்றிருந்த இந்த நிகழ்ச்சியில் மாணவர்கள் அனைவருக்கும் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பசுமை அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நிதி அனுசரணையை கனடா ரொறன்ரோ ஞானம்மா திருநாவுக்கரசு அம்மையார் மனித நேயக்குரல் அமைப்பினூடாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# மீனவர் பிரச்சினை தொடர்பான இந்தியா – இலங்கை கூட்டு பணிக்குழுவின் கூட்டம் விரைவில் நடைபெறும்

## அண்ணாமலை தெரிவிப்பு




மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்தியா – இலங்கை கூட்டு பணிக் குழு கூட்டம் விரைவில் நடைபெறும் என பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மீனவர் பிரச்சினையை சட்டம் ஒழுங்காகவோ, எல்லை பிரச்சினையாகவோ அணுகாமல் மனிதாபிமான பிரச்சினையாக அணுக வேண்டும் என்றே இந்திய அரசு, இலங்கை அரசிடம் வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில், மீனவ பிரச்சினை தொடர்பாக தாம் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதமொன்றை எழுதியதாகவும், அந்த கடிதத்திற்குப் பதிலளித்த அவர் இந்தியா – இலங்கை கூட்டுப் பணிக்குழு கூட்டம் விரைவில் நடைபெறும் எனக் குறிப்பிட்டார் என்றும் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.



# பாடகி ஸ்ரேயா கோஷலின் எக்ஸ் தளத்தில் ஊடுருவல்

பிரபல பின்னணி பாடகி ஸ்ரேயா கோஷலின் எக்ஸ் தள பக்கம் "ஹேக்" செய்யப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி முதல் தனது எக்ஸ் தள பக்கம் ஹேக் செய்யப்பட்டுள்ளதாக அவர் தனது இன்ஸ்டாகிராம் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

அதில் கடந்த பெப்ரவரி 13ஆம் திகதி முதல் எனது எக்ஸ் கணக்கு ஹேக் செய்யப்பட்டுள்ளது என்பதை எனது ரசிகர்கள் மற்றும் நண்பர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்" எனப் பதிவிட்டிருந்தார்.

மேலும், தனது கணக்கில் பதிவிடப்படும் எந்தவொரு பதிவு, கருத்து, செய்தி அல்லது அறிவிப்புக்கும் யாரும் பதிலளிக்க வேண்டாம் என ஸ்ரேயா கோஷல் தெரிவித்துள்ளார்.

தனது கணக்கு மீட்டெடுக்கப்பட்டதும், அதைப் பற்றி ஒரு காணொளி மூலம் மக்களுக்குத் தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.



# உத்தரகண்டில் பனிச்சரிவில் பலியானோர் 8 ஆக உயர்வு

உத்தராகண்ட் மாநிலம் சமோலியில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவின் உத்தரகண்ட் மாநிலம், சாமோலி மாவட்டத்தில் உள்ள மனா கிராமத்திற்கு அருகே கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி ஏற்பட்ட பனிச்சரிவில், சுமார் 55 தொழிலாளர்கள் புதையுண்டனர்.

அதனைத் தொடர்ந்து 100 இற்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் இணைந்து அவர்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், 46 தொழிலாளர்கள் மீட்கப்பட்டு இராணுவ வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

தொடர்ந்தும் காணாமல் போனவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் காணாமல் போனவர்களின் சடலங்கள் நேற்றும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்வடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# உக்ரைனுக்கான அமெரிக்காவின் ஆயுத உதவிகள் திடீரென நிறுத்தம்

உக்ரைனுக்கு வழங்கிய ஆயுத உதவிகளை அமெரிக்கா திடீரென நிறுத்தி உள்ளது. எனினும் பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு தொடர்ந்து ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றன.

2022 பெப்ரவரி முதல் ரஷ்யா, உக்ரைன் இடையே போர் நடைபெற்று வருகிறது. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன், உக்ரைனுக்கு தேவையான ஆயுத உதவிகளை வழங்கி வந்தார். கடந்த ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற ட்ரம்ப், உக்ரைனுக்கான ஆயுத உதவிகளை படிப்படியாக நிறுத்தி வந்தார்.

இந்த சூழலில் கடந்த வெள்ளிக்கிழமை வெள்ளை மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின்போது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இடையே பகிரங்கமாக மோதல் ஏற்பட்டது. இதன் காரணமாக உக்ரைனுக்கான ஆயுத உதவிகள் திடீரென நிறுத்தப்பட்டு உள்ளன.

# ட்ரம்ப்புக்கு நன்றி தெரிவித்து காணொலி வெளியிட்டார் வொளாடிமிர் ஜெலன்ஸ்கி



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு நன்றி தெரிவித்து உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த நன்றி உக்ரைனின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான நன்றியுணர்வு எனக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் உள்ளிட்டோரை ஜெலன்ஸ்கி சந்தித்துக் கலந்துரையாடினார்.

எனினும் அந்தக் கலந்துரையாடல் இறுதியில் குழப்பத்துடனேயே நிறைவுற்றது.

இதன் தொடர்ச்சியாக, உக்ரைனுக்கு ஆதரவு அளித்து வரும் ஐரோப்பிய நாடுகளின் உச்சி மாநாடு நேற்று லண்டனில் நடைபெற்றது.

பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் நடத்திய இந்த பாதுகாப்பு உச்சி மாநாட்டில் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி உள்ளிட்ட 18 தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில், ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு தங்களது ஆதரவை உறுதிப்படுத்தின.

மேலும், பிரித்தானிய, உக்ரைனுக்கு கடன் வழங்குவதற்கான ஒப்பந்தமும் கையெழுத்தாகியது.

இந்தமாநாட்டைஅடுத்துஜெலன்ஸ்கி, அமெரிக்க ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்து ஒரு காணொலி வெளியிட்டுள்ளார்.

அந்த காணொலியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“அமைதி உண்மையானதாக இருக்க, உக்ரைனுக்கு உண்மையான பாதுகாப்பு உத்தரவாதங்கள் தேவை எனும் முக்கிய பிரச்சினையில் அனைவரும் ஒன்றுபட்டுள்ளனர்.

பிரித்தானிய உள்பட ஒட்டுமொத்த ஐரோப்பியக் கண்டத்தின் நிலைப்பாடு இதுதான். அமெரிக்காவின் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.

அமெரிக்காவிடமிருந்து எங்களுக்குக் கிடைத்த அனைத்து ஆதரவிற்கும் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

நன்றியை உணராத நாள் இல்லை.

இது நமது சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான நன்றியுணர்வு.

எங்களுக்குத் தேவை அமைதி, முடிவில்லாத போர் அல்ல.

அதனால்தான் பாதுகாப்பு உத்தரவாதங்கள் இதற்கு முக்கியம் என்று நாங்கள் கூறுகிறோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

பக்கங்கள் - 4

# கனடா முரசு

திங்கட்கிழமை 03/03/2025

## எக்ஸ்பிரஸ் நுழைவு வகை ஊடாக புலம்பெயர்ந்தோருக்கு வேலைவாய்ப்பு



C2▶



# மன்னர் சார்ள்ஸை சந்திக்கிறார் ட்ரூடோ

மன்னர் சார்ள்ஸின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப் போவதாக ட்ரம்ப் மிரட்டிக் கொண்டிருக்கும் நிலையில், அது குறித்து மன்னர் சார்ள்ஸுடன் பேசுவது என ட்ரூடோ முடிவு செய்துள்ளார்.

மன்னர் சார்ள்ஸின் தலைமையின் கீழ் பிரித்தானியா மட்டுமின்றி அவுஸ்திரேலியா, கனடா, புசநயெனய, ஜமைக்கா, நியூசிலாந்து, பாப்புவா நியூகினியா உட்பட மொத்தம் 15 நாடுகள் உள்ளன.

எனவே, கனடாவின் தலைவரும் மன்னர் சார்ள்ஸ்தான்.

இந்நிலையில், மன்னர் சார்ள்ஸின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் கனடாவை, அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மிரட்டிக்கொண்டே இருக்கிறார்.

ஆனால், இதுவரை அது குறித்து மன்னர் சார்ள்ஸ் கருத்து எதையும் தெரிவிக்கவில்லை. அதனால், கனேடிய மக்கள் வருத்தமடைந்துள்ளார்கள்.

சமூக ஊடகமான எக்ஸில் கனேடியர்கள் மன்னர் மீதான வருத்தத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில், கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ, இன்று மன்னர் சார்லசை சந்திக்கிறார்.

ட்ரூடோ மன்னரை சந்திக்கும்போது, கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக ட்ரம்ப் மிரட்டல் விடுத்துக் கொண்டிருக்கும் விடயம் குறித்த பிரச்சினையை மன்னர் முன் எழுப்ப இருக்கிறார் ட்ரூடோ.

# எட்டோபிக்கோவில் சிறுவன் கொலை: டொராண்டோவை சேர்ந்த இருவர் கைது

எட்டோபிக்கோவில் இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய வழக்கில், டொராண்டோவைச் சேர்ந்த இரண்டு ஆண்கள் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

7 கேப்ரி வீதி, ஈஸ்ட் மால் மற்றும் ரத்பர்ன் வீதி அருகே உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த டொராண்டோ பொலிஸார், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இரண்டு ஆண்களை மீட்டு, உடனடியாக அவசர முதலுதவிகளை வழங்கினர். இருவரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஆனால் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். சம்பவத்தில் பலியானவர் 16 வயது இசையா போகா என பொலிஸார் உறுதி செய்தனர்.



C2▶



# எக்ஸ்பிரஸ் நுழைவு வகை ஊடாக புலம்பெயர்ந்தோருக்கு வேலைவாய்ப்பு

கனடா 2025 எக்ஸ்பிரஸ் நுழைவு வகை ஊடாக தொழிலாளர் பற்றாக் குறையைக் குறைக்க கனடிய அரசு திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனடிப்படையில், கனடாவின் தேவைக்கு ஏற்ப பல்வேறு துறைகளில் பணியாற்ற வெளிநாட்டினர் வரவேற்கப்படுகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், இந்த ஆண்டு, ஆசிரியர்கள், ஆசிரியர்களுக்கான உதவியாளர்கள், ஆரம்பகால குழந்தைப் பருவக் கல்வியாளர்கள், சமையல்காரர் ஆகியோரின் தேவை அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தவிர அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் (STEM - Science, Technology, Engineering, Mathematics) துறையில் அனுபவம் பெற்றவர்களையும், தொழில்துறை (Trades), விவசாயம் மற்றும் பிரஞ்சு மொழி திறமை கொண்டவர்களையும் கனடா வரவேற்க தயாராக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்பின் அதிரடி முடிவுகளால், அமெரிக்காவில் புலம்பெயர்ந்தோருக்கு விசா நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், கனடா பக்கம் நோக்கி புலம் பெயர் தொழிலாளர்கள் திரும்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



**எட்டோபிக்கோவில்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மேற்படி சிறுவன் டொராண்டோவில் இந்த ஆண்டு நடந்த இரண்டாவது கொலை சம்பவத்தின் பலியானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவத்திற்குப் பிறகு, முகமூடிகள் அணிந்த இரண்டு சந்தேக நபர்கள் கட்டடத்திலிருந்து வெளியேறி தப்பியோடினர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டொராண்டோ பொலிஸின் கொலை மற்றும் காணாமல் போனவர்கள் விசாரணைப் பிரிவு, தேடப்பட்ட இருவரையும் அடையாளம் கண்டு கைது செய்துள்ளது.

எலியட் சாவியர் யேரா (வயது 18) மற்றும் ஷமோன் பொம்பே-தாமஸ் (வயது 20) ஆகிய சந்தேக நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congres Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

NORTH & EAST ECONOMIC DEVELOPMENT CENTRE

# கனடா-மட்டக்களப்பு நட்புறவுப்பண்ணையில் முருங்கை பதனிடும் ஆலை திறப்பு
















கனடிய தமிழர் பேரவை (CTC) மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி மையம் (NEED Centre) இணைந்து 2025 பெப்ரவரி 27, மட்டக்களப்பில் முருங்கை பதனிடும் ஆலையைத் திறந்து வைத்துள்ளது. இது கனடா – மட்டக்களப்பு நட்புறவுப் பண்ணையின் – கைல் டி. ராஜா திட்டத்தின் இரண்டாம் கட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய வசதி மட்டக்களப்பு மாவட்டத்தின் வேளாண்மை துறையை வலுப்படுத்துவதோடு, முருங்கை உற்பத்தியை அதிகரித்து உள்ளூர் விவசாயிகளுக்கு அதிகமான பொருளாதார வாய்ப்புகளை உருவாக்க உதவும்.

2024 பெப்ரவரியில் திறக்கப்பட்ட கனடா-மட்டக்களப்பு நட்புறவுப்பண்ணை – கைல் டி. ராஜா திட்டம் தற்போது கணிசமான வளர்ச்சி கண்டுள்ளது. இதுவரை 2,000-க்கும் மேற்பட்ட முருங்கை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதன் மூலம் முருங்கை உற்பத்தி உயர்ந்துள்ளதுடன், பலருக்கு வேலை வாய்ப்புகளும் உருவாகியுள்ளது. முருங்கை ஊட்டச்சத்து மிகுந்ததும் வர்த்தக ரீதியாக அதிக மதிப்புள்ளதுமான ஒரு பயிராக இருப்பதால், இந்த இரண்டாம் கட்டமாக முருங்கை இலையை பதனிடும் ஆலை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் அதிக பொருளாதார பலன்களை பெறுவதுடன் சர்வதேச சந்தைகயிலும் இவற்றிற்கு அதிக மதிப்பு இருப்பதாகவும் அமையும்.

2025 பெப்ரவரி 27 அன்று நடைபெற்ற இந்த புதிய பதனிடும் ஆலையின் திறப்பு விழா பாரம்பரிய தமிழ் வரவேற்புடன் நடைபெற்றிருந்தது. சிறப்பு விருந்தினர்களுக்கு மரியாதையாக மாலைகள் அணிவிக்கப்பட்டன. அதன் பின்னர் சிறப்பு விருந்தினர்களாலும், கனடிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகளாலும் மங்கள விளக்கேற்றலுடன் திறப்புவிழா ஆரம்பிக்கப்பட்டது. விழாவின் முக்கிய நிகழ்வாக, CTC நிர்வாக இயக்குநர் டன்ரன் துரைராஜா, மூத்த உதவி அரசாங்க அதி-

தொடர்ச்சி▼

# கனடா-மட்டக்களப்பு நட்புறவுப்பண்ணையில் முருங்கை பதனிடும் ஆலை திறப்பு











தொடர்ச்சி▲

பர் திருமதி முகுந்தன், NEED மையத் தலைவர் யோகேஸ்வரன் மயில்வாகனம், முன்னாள் மட்டக்களப்பு மேயர் சரவணபவன் தியாகராஜா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கத்தின் உதவியாளர் விமலநாதன் மதிமேனன் ஆகியோர் இணைந்து முருங்கை பதனிடும் ஆலையை திறந்து வைத்தனர்.

திறப்பு விழையின்போது பல முக்கிய பேச்சாளர்கள் இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். CTCயின் இலங்கைக்கான மனிதாபிமான திட்ட ஒருங்கிணைப்பாளர், துஷ்யந்தன் ஆர். துரைரத்தினம், CTC இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ் விவசாயிகளின் வாழ்க்கையை நேரடியாக முன்னேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை எடுத்துக்காட்டினார். மூத்த உதவி அரசாங்க அதிபர் திருமதி முகுந்தன், இந்தத் திட்டம் மட்டுமல்ல, இதுபோன்ற முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்து ஆதரிக்கப் போவதையும், இது உள்ளூர் மக்களுக்கு மிகுந்த பயன் தரும் என்றும் கூறினார். NEED மையத்தின் தலைவர், மயில்வாகனம் யோகேஸ்வரன், பதனிடும் செயல்முறைகள் உள்ளூரில் நடைபெறுவதன் மூலம் விவசாயிகள் அதிக இலாபம் காண முடியும் என்றார். முன்னாள் மட்டக்களப்பு மேயர், தியாகராஜா சரவணபவன், இந்தப் பகுதியின் வேளாண்மை மரபு பற்றிப் பேசினார். மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கத்தின் செயலாளர், விமலநாதன் மதிமேனன், இந்தத் திட்டம் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் எனப் பாராட்டினார்.

இந்த முருங்கை பதனிடும் ஆலையை நிறுவுவதற்கு முன்பு, விவசாயிகள் முருங்கை இலைகளை வேறு இடங்களில் பதனிட அனுப்புவதற்காக பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டனர். இதனால் அவர்களின் விற்பனை பெரும்பாலும் மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால், இப்போது இந்த ஆலையால் விவசாயிகள் தங்கள் பயிர்களை உள்ளூரிலேயே பதனிட முடியும், இதனால் அவர்கள் அதிக வருமானம் பெறமுடியும். இதேசமயம், இந்த ஆலையால் பல நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகும். இவை மட்டுமல்லாமல் வீட்டுத் தோட்டங்களில் முருங்கை வளர்க்கும் விவசாயிகளிடம் நியாயமான விலைக்கு முருங்கை இலைகளை வாங்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்படும் என்பதோடு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நிலையான வாய்ப்பாகவும் இது அமையும். முருங்கைத் தூள் தயாரிப்பு அதிகரிக்கப்படுவதன் மூலம், சர்வதேச சந்தையில் தமிழ் விவசாயிகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கும்.

விவசாயிகளை மேலும் ஊக்குவிக்கும்வகையில், இந்தத்திறப்பு விழாவில் 50 பயனாளிகளுக்கு முருங்கை மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் மக்கள் தங்கள் வீட்டுத் தோட்டங்களில் முருங்கை வளர்த்து, இதன்மூலம் நேரடி வருமானம் ஈட்டவும், உடல்நலத்திலும் பலன்களைப் பெறவும் முடியும். மேலும், கனடா மட்டக்களப்பு நட்புறவுப்பண்ணை நிர்வாகம் பயனாளிகளிடமிருந்து முருங்கை இலைகளை முறையான விலையில் வாங்கும் என்றும் உறுதிமொழி அளித்துள்ளது.

கனடிய தமிழர் பேரவை மற்றும் NEED மையம் தமிழ் சமூகத்தின் நிலையான பொருளாதார முன்னேற்றத்திற்காக தொடர்ந்து முதலீடு செய்ய உறுதிபூண்டுள்ளது. இந்த முருங்கை பதனிடும் ஆலையின் தொடக்கம், தமிழ் விவசாயிகளை மட்டுமல்லாமல், முழு சமூகத்தையும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் ஒரு மாற்றத்திற்கான அடிப்படையாக அமையும். இது நீடித்த பொருளாதார மற்றும் சமூக மாற்றத்தை உருவாக்கக் கூடிய ஒரு முக்கிய முயற்சியாக பார்க்கப்படுகிறது.